முக்கிய வார்த்தைகள்:
இளைஞர்கள்
சவால்கள்
கொள்கை

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**01 மே 2026 / 13 துல்கஃதா ஹிஜ்ரி 1447**

# <u>இளைஞர்களும் இன்றைய சவால்களும்</u>

ٱلْحَمْدُ لِلَّهِ ٱلَّذِي هَدَانَا لِهَٰذَا وَمَا كُنَّا لِنَهْتَدِيَ لَوْلَا أَنْ هَدَانَا ٱللَّهُ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّٰهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ، وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ وَلَا تَمُوتُنَّ إِلَّا وَأَنْتُمْ مُسْلِمُونَ.

**ஜும்ரதல் முஃமினீன் ரஹிமகுமுல்லாஹ் [ஓரிறை நம்பிக்கை யாளர்களின் சமுதாயமே அல்லாஹ் உங்களுக்கு அருள் புரிவானாக!]**
ஒவ்வொரு நொடிப் பொழுதிலும், ஒவ்வொரு சூழ்நிலையிலும் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவைப் பயந்து கொள்ளுங்கள்; அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளுக்கு அடிபணிந்து நடந்து கொள்ளுங்கள்; அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள்; அந்நிலையில், இம்மையிலும் மறுமையிலும் நாம் வெற்றியை அடையலாம். ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**அன்பிற்குரிய சகோதரர்களே! குறிப்பாக, இளைஞர்களே!**
திருக்குர்ஆனின் "அல்-கஹ்ஃப்" எனும் அத்தியாயத்தின் 13-வது வசனத்தில், தமது ஓரிறை நம்பிக்கைக்குச் **சவால்களை** ஏற்படுத்தும் சூழ்நிலையை எதிர்கொண்ட போதிலும், தமது ஓரிறை நம்பிக்கையில் நிலைத்து நின்ற

இளைஞர்களின் வரலாற்றை அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா பின்வருமாறு பதிவு செய்துள்ளான்:

نَّحۡنُ نَقُصُّ عَلَيۡكَ نَبَأَهُم بِٱلۡحَقِّۚ إِنَّهُمۡ فِتۡيَةٌ ءَامَنُواْ بِرَبِّهِمۡ وَزِدۡنَٰهُمۡ هُدٗى ١٣

பொருள்: "[முஹம்மது அவர்களே!] நாம் உமக்கு அவர்களுடைய [இளைஞர்கள்] வரலாற்றை உண்மையாக அறிவிக்கின்றோம்; நிச்சயமாக அந்த **இளைஞர்கள்** - தங்கள் இறைவன் மீது ஈமான் [ஓரிறை நம்பிக்கை] கொண்டார்கள்; இன்னும் நாம் அவர்களுக்கு நேர்வழியை அதிகப்படுத்தினோம்"

திருக்குர்ஆன் விரிவுரையாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்: இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள **இளைஞர்கள்** எனும் பொருளுடைய *ஃபித்யா* எனும் அரபி வார்த்தை, ஏற்கனவே, இதே அத்தியாயத்தின் இதற்கு முந்திய வசனத்தில் கூறப்பட்டுள்ள போதிலும், இந்த வசனத்திலும் மீண்டும் கூறப்பட்டுள்ளதற்குக் காரணம், அவர்களின் சிறப்புமிக்க தனித்தன்மையைச் சுட்டிக் காட்டுவதாகும்; அவர்கள் சாதாரணமான **இளைஞர்கள்** அல்ல, அல்லாஹ்வின் மீதான நம்பிக்கையால் அவர்களின் உள்ளங்கள் நிரப்பமானவையாக இருந்தன எனச் சுட்டிக் காட்டுவதற்காக அல்லாஹ் இவ்வாறு மீண்டும் அவ்வார்த்தையைக் கூறியுள்ளான் எனத் தெரிவித்துள்ளார்கள்.

இமாம் இப்னு கஸீர் [ரஹ்] அவர்கள் குறிப்பிடுகையில்: *"அஸ்ஹாபுல் கஹ்ஃப்"* உடைய **இளைஞர்களை,** அவர்களை விட வயதில் மூத்தவர்களுடன் ஒப்பிடுகையில், உண்மையை மதிப்பிட்டு ஏற்றுக் கொள்வதில் அதிகத் திறந்த மனதுடன் அவர்கள் காணப்பட்டுள்ளார்கள்; அவர்களின் ஓரிறை நம்பிக்கைக்குச் சோதனைகள் ஏற்பட்ட காலத்தில் அவர்கள் வாழ்ந்த போதிலும், தொடர்ந்து அவர்கள் தமது நம்பிக்கையில் உறுதியுடனும் **கொள்கைப் பற்றுமிக்கவர்களாகவும்** காணப்பட்டார்கள்; அதற்காக, ஒருபக்கம் அவர்கள் முயற்சி செய்தார்களென்றால், மறுபக்கம்

அல்லாஹ்வின் மீது முழு நம்பிக்கை வைத்திருந்தார்கள்” எனக் கூறுகிறார்கள்.

எனவே, அல்லாஹ், ஒருவரின் அந்தஸ்தை அவரது வயதைக் கொண்டு அளவிடுவதில்லை; மாறாக, அல்லாஹ்வின் நேர்வழியின் பக்கம் தன்னை ஒப்படைத்துக் கொள்ளும் அவரது நேர்மையான உள்ளம் மற்றும் ஆன்மாவைக் கொண்டே அளவிடுகிறான். *அஸ்ஹாபுல் கஹ்ஃப்* உடைய **இளைஞர்களின்** வரலாறானது, எவர்கள் தமது இறைவனை உண்மையாகவே ஏற்றுக் கொள்கிறார்களோ - அவர்கள் இளம் வயதுடையவர்களாக இருந்தாலும் சரி - அவர்களின் அந்தஸ்த்துகளை அல்லாஹ் மதிப்பீடு செய்து உயர்த்துகிறான்; அவர்களின் நம்பிக்கையைப் பாதுகாக்கின்றான்; அவர்களுக்கு மரியாதை செய்கிறான் என்பதற்கு ஆதாரமாக உள்ளது.

**அருள்மிக்க சகோதரர்களே**!

தற்காலத்தில் **இளைஞர்களால்** எதிர்கொள்ளப்படும் சூழல்களும் **சவால்களும்** 15 அல்லது 20 ஆண்டுகளுக்கு முன்பு காணப்பட்ட சவால்களை விட அதிக வித்தியாசமானவையாக இருப்பதைக் காண்கிறோம்.

இன்று, பல துறைகளில் நமது **இளைஞர்களின்** திறன்களைப் பிரதிபலிக்கின்ற உடன்பாடான சாதனைகள் நிகழ்த்தப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். அதே சமயம், சிலவேளைகளில், அவர்களை உட்படுத்துகின்ற சமூகப் பிரச்சனைகளும் **சவால்களும்** தொடர்ந்து இருந்து வருவதை நாம் மறுக்க முடியாது,

அன்பிற்குரிய சகோதரர்களே! இவ்வாறு ஏன் ஏற்படுகின்றன? என நாம் சிந்திக்க வேண்டும். இதற்குக் காரணம், இன்றைய உலகம் மிக அதிகமாகத் திறக்கப்பட்டதாக ஆகியுள்ளதாகும். சாதகமான மற்றும் எதிர்மறையான உலகளாவிய விதிமுறைகள் எல்லையில்லாமல் பரவி வருவதாகும்;

டிஜிடல் ஊடகங்களின் மூலம் செய்திகள் மிக வேகமாகப் பயணிப்பதும் ஒரு காரணமாகும்.

தற்காலத்தில் **இளைஞர்களால்** எதிர்கொள்ளப்படும் **சவால்கள்**, எதிர் வரும் காலங்களில் ஒட்டு மொத்த சமுதாயத்தைப் பாதிக்கும் மிகப் பெரிய சவால்களாக ஆகுவதற்கு வாய்ப்புள்ளது. காரணம், இன்றைய **இளைஞர்கள்** தான், நாளைக்கு பெற்றோர்களாகவும் தலைவர்களாகவும் வருங்காலத் தலைமுறையினரின் பாதுகாவலர்களாகவும் ஆக இருக்கின்றார்கள்.

இங்கு, *அஸ்ஹாபுல் கஹ்ஃப்* உடைய **இளைஞர்களின்** வரலாறு நம்மிடம் ஆழ்ந்த பொருளுடன் பேசுவதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். அன்று, அவர்களின் நம்பிக்கையை, சோதனைகளும் அழுத்தங்களும் உலுக்கிய போது, அவர்கள் உறுதியாக நின்றார்கள்; **அச்சவால்கள்** அவர்களை பலஹீனமாக ஆக்கிடவில்லை; மாறாக, அச்சவால்கள் அவர்களின் தீர்மானத்தைப் பலப்படுத்தின.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே**!
இன்றைய "குத்பா" பிரசங்கமானது, மூன்று வழிகாட்டும் கொள்கைகள் மூலம் இஸ்லாமிய **இளைஞர்களிடம்** சகிப்புத்தன்மை ஏற்படுத்தப்பட வேண்டும் என அழைப்பு விடுக்கின்றது;

**முதலாவதாக, நெறிமுறைகளையும் ஒழுக்க மாண்புகளையும் இஸ்லாமியக் கண்ணாடியில் மதிப்பீடு செய்வது**

இன்று, ஒழுக்க மாண்புகளைப் பெரும்பாலும் தனிநபர்களின் உரிமைகள் மற்றும் சமூகப் பார்வைகள் மூலம் மதிப்பிடப்படுகின்றன. சுதந்திரம் வலியுறுத்தப்படுகிறது. ஆனால் பொறுப்புணர்வு, அமானிதம், கண்ணியம் ஆகியவை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை. இன்று, சமூக விதிமுறைகளின் சில பகுதிகளை ஊடகங்கள் எவ்வாறு வடிவமைக் கின்றன என்பதைக் கவனிக்க வேண்டும். திருமணத்திற்கு முந்திய பாலியல் உறவுகளை சுதந்திரம், இணங்குதல், சம்மதித்தல் எனும் கண்ணாடியில்

பார்க்கப்படுகிறது. இவை, தனிநபர்கள், குடும்பங்கள் மற்றும் சமுதாயத்தின் மீது  நீண்ட கால தாக்கத்தை ஏற்படுத்துமே எனக் கவலைப்படுவதில்லை.

இஸ்லாம், இவ்விஷயங்களை முழுமையாக அணுகுகின்றது; நீண்ட கால மஸ்லஹா, அதாவது, நலனைக் கவனத்தில் கொள்கிறது. உதாரணமாக, வம்சாவழியைப் பாதுகாத்தல், தனிப்பட்ட கண்ணியம், சமூக அறநெறிகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவமளிக்கின்றது. எனவே தான், இஸ்லாம் ஆண், பெண்ணுக்கு மத்தியிலான உறவை, ஷரீஅத் ஏற்படுத்தியுள்ள திருமண பந்தத்தின் மூலம் மட்டும் அனுமதிக்கின்றது. இவ்வகையானப் பாதுகாப்பு, அல்லாஹ் தன் அடியார்களுக்கு ஏற்படுத்தியுள்ள கிருபையை அடிப்படையாகக் கொண்டதாகும்.

எனவே, மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ள ஒவ்வொரு விஷயமும் ஆன்மீக வழிகாட்டுதலுடன் ஒத்துப் போவதில்லை. இஸ்லாம் உரிமைகளை மறுக்கவில்லை. எனினும், அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்காக, உரிமைகள் மற்றும் பொறுப்புணர்வு, விவேகம் ஆகியவற்றுக்கு மத்தியில் சமநிலையானப் போக்கைப் பின்பற்றுகிறது.

**இரண்டாவதாக, பழக்கமானதை விட, உண்மையைத் தேர்ந்தெடுக்கத் துணிவு கொள்வது**

தற்காலத்தின் மிகப் பெரிய சோதனைகளில் ஒன்று, தவறான விஷயங்கள் பழக்கமானவையாக ஆகி விட்டதாகும். சில தவறான விஷயங்கள் பரவலானதாகவும், பொதுவானதாகவும் ஆகி விடும் போது அவற்றைப் பற்றிக் கேள்வி கேட்பதை நிறுத்திக் கொள்கிறோம்; உதாரணமாக, ஆபாசமான பேச்சுக்களைப் பயன்படுத்துதல் போன்ற எதிர்மறையானப் பழக்கங்களை எடுத்துக் கொள்ளலாம். மிகக் கவலைக்குரிய விஷயம் யாதெனில், இப்பழக்க, வழக்கங்கள் தவறானவை, பாவமானவை என நாம் அறிந்திருந்தும் கூட, அவை பழக்கமானவை, அவற்றைச் சரிசெய்ய வேண்டிய அவசியமில்லை எனக் கருதி, அவற்றை ஏற்றுக் கொள்வதாகும்.

அன்பிற்குரிய சகோதரர்களே! உண்மையை எண்ணிக்கையால் அளப்பதோ, மதிப்பீடு செய்வதோ கூடாது என இஸ்லாம் நமக்குப் போதித்துள்ளது. *பலர் இதனைச் செய்கிறார்கள்;* எனவே இது சரி அல்லது தவறு எனத் தீர்மானிக்கக் கூடாது. அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலா, திருக்குர்ஆனின் "ஜாஸியா" எனும் அத்தியாயத்தின் 18-வது வசனத்தில் கூறுகிறான்:
*"பின்னர் [நபியே!] உம்மை ஷரீஅத்தின் ஒரு நேரான வழியில் நாம் ஆக்கியுள்ளோம்; ஆகவே நீர் அதனையே பின்பற்றுவீராக; அன்றியும், அறியாமல் இருக்கின்றார்களே அவர்களின் விருப்பங்களைப் பின்பற்றாதீர்"*

ஒரு ஓரிறை நம்பிக்கையாளரான **இளைஞர்**, *அஸ்ஹாபுல் கஹ்ஃப்* உடைய **இளைஞர்களைப்** போன்று, உண்மையையும் பொய்யையும் பிரித்தறியும் ஆற்றலைப் பெற வேண்டும். **இக்கொள்கையில்** நிலைத்து நின்று, மார்க்க வழிகாட்டுதலை அடிப்படையாகக் கொண்டு வாழ்பவர்களை விட்டும், தமது சுற்றுப்புற அழுத்தங்களால் அடித்துச் செல்லப்பட்டவர்களைப் பிரித்தறிய முயற்சிக்க வேண்டும்.

**மூன்றாவதாக, அல்லாஹ்வின் பக்கம் பயணம் செய்து கொண்டிருக்கும் நாம், நல்ல தோழர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.**

அன்பிற்குரிய சகோதரர்களே! பொதுவாக, நமது சுற்றுப்புறச் சூழ்நிலைகளால் நாம் வடிவமைக்கப்படுகிறோம்; நாம் யாருடன் நமது நேரத்தைச் செலவழிக்கின்றோமோ அவர்கள், நமது உள்ளங்களில் நுழைகின்ற சப்தங்கள் ஆகியவை அவற்றில் குறிப்பிடத்தக்கவையாகும். இறைத்தூதர்[ஸல்] அவர்கள் நமக்கு நினைவூட்டியுள்ளார்கள்:
*"ஒருவர், தனது நண்பனின் வழியைப் பின்பற்றுபவராக இருக்கின்றார்; எனவே யாரை நீங்கள் நண்பர்களாக ஆக்கிக் கொள்கிறீர்கள் என்பதில் கவனம் செலுத்துங்கள்"* [ஹதீதைப் பதிவு செய்து அறிவிப்பவர்: இமாம் அஹ்மது ரஹ்]

இன்று, நமது நண்பர்களின் வட்டம் என்பது, நாம் யாரை உடல் ரீதியில் சந்திக்கின்றோமோ அவர்கள் மட்டுமல்ல, சமூக ஊடகங்களில் நாம் கேட்கும் சப்தங்களும், நாம் யாருடன் பழகுகிறோமோ அந்த உருவங்களும் நமது

நண்பர்களாக இருக்கின்றார்கள்.; டிஜிடல் மூலமாக, வெளிப்புறத்திலிருந்து நம்மீது ஆதிக்கம் செலுத்தும் விஷயங்களும் உள்ளன; நாம் பார்க்கின்ற ஒவ்வொரு பார்வையும், கிளிக் செய்கின்ற, பின்பற்றுகின்ற ஒவ்வொரு விஷயமும் நமது உள்ளங்கள் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன; அவை, நமது சிந்தனைக்கு வடிவம் கொடுக்கின்றன. எனவே, நண்பர்களைத் தேர்வு செய்வதில் அறிவுப்பூர்வமாகச் செயல்பட வேண்டும்; அல்லாஹ்வின் பக்கம் நம்மை நெருக்கமாக்கி வைக்கும் விஷயங்களை நாம் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**மரியாதைக்குரிய ஜமாஅத்தார்களே!**

உண்மையில், நமது **இளைஞர்களிடம்** சகிப்புத்தன்மையை உருவாக்குவ தென்பது அவர்கள் சார்ந்த விஷயம் மட்டுமல்ல, அவர்களுக்கு நுட்பமாகவும் கிருபையோடும் வழிகாட்டுவது மூத்த தலைமுறையினர் மீதும் கடமையாகும்.

நம்பிக்கையில் உறுதியான, தெளிவான **கொள்கையுடைய**, காலத்தின் **சவால்களை** அறிவுப்பூர்வமாக எதிர்கொள்கின்ற **இளைஞர்களை** உருவாக்குவதற்கு நாம் அனைவரும் இணைந்து முயற்சிப்போமாக! அல்லாஹ்வின் திருப்தியைப் பெற்றுத் தருகின்ற வழியை எல்லாம் வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் காட்டுவானாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ الْعَظِيمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الْغَفُوْرُ الرَّحِيْم.**

<u>இரண்டாவது பிரசங்கம்</u>

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيِّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَموَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلاءَ وَالوَبَاءَ وَالحَرْبَ وَالاعْتِدَاءَ. اللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا المُسْتَضْعَفِينَ فِي غَزَّةَ وَفِي فِلَسْطِينَ، وَفِي كُلِّ مَكَانٍ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ.

اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلَامَ وَالْأَمْنَ وَالأَمانَ لِلْعالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ.
رَبَّنا آتِنا فِي الدُّنيا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنا عَذابَ النّارِ.

عِبادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسانِ وَإِيتاءِ ذِي الْقُرْبى، وَيَنْهى عَنِ الفَحْشاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذْكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ ما تَصْنَعُونَ.